


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.9.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்களால் உண்டியல் மற்றும் காணிக்கையாக செலுத்தப்பட்ட பலமாற்றுப் பொன் இனங்களில் திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, இதர இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் உருக்காலையில் உருக்கி தூய தங்கக்கட்டிகளாக முதலீடு செய்யப்பட்டதற்கான தங்க முதலீட்டு பத்திரத்தினை, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர். அருள்முருகன் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் கோவிந்த் நாராயண் கோயல் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.9.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயிற்சியாளர்கள் ரோமோனிய நாட்டைச் சேர்ந்த தடகளப் பயிற்சியாளர் பெட்ராஸ் பெட்ரோசியன் (Bedros Bedrosian), டச்சு நாட்டைச் சேர்ந்த ஹாக்கி பயிற்சியாளர் எரிக் வோனிக் (Eric Wonink), அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் பயிற்சியாளர் சஞ்சய் சுந்தரம் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இந்த நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம் கண்டியூர் ஊராட்சியில் ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய புதிய கட்டிடத்தினை நேற்று முன்தினம் (04.09.2023) பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன் (திருவையாறு), கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) எச்.எஸ். ஸ்ரீகாந்த் மற்றும் பலர் உடன் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.9.2023) தலைமைச் செயலகத்தில், தென் கொரியாவில் நடைபெற்ற சர்வதேச சிறார் கலைப்போட்டியில் வெற்றி பெற்ற செல்வி ஹான்னா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து தான் வரைந்த ஓவியத்தை முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். உடன் அவரது தந்தை முனைவர் ஃபிரான்சிஸ் அடைக்கலம் மற்றும் திருமதி ஜே. சில்வியா ஆகியோர் உள்ளனர்.




## தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா -
## தி.மு.க. பவள விழா ஆண்டு

கலைஞர் 100 1924 - 2023

# தி.மு.க. முப்பெரும் விழா 2023

நாள் : 17-09-2023 மாலை 5.00 மணி.
இடம் : பள்ளிகொண்டா. வேலூர்

வரவேற்புரை :
**ஏ.பி. நந்தகுமார்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாவட்ட தி.மு.க.

தலைமை :
பொதுச்செயலாளர் **துரைமுருகன்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை பரிசு வழங்கும் விழா**

**“கழக விருது”க்காக** தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில்
ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று
- பணமுடிப்பு வழங்குதல்

விருது - பரிசுகள் வழங்கிச் சிறப்புரை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**தலைவர் மு.க.ஸ்டாலின்**

: வாழ்த்துரை :

பொருளாளர் **டி.ஆர். பாலு**
முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு**
துணைப் பொதுச்செயலாளர்கள் முனைவர் **க.பொன்முடி**
**ஆ.இராசா**
**கனிமொழி கருணாநிதி**
அந்தியூர் **ப.செல்வராஜ்**

நன்றியுரை :
**ப.கார்த்திகேயன்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாநகர தி.மு.க.


**பெரியார் விருது**
**திரு. கி.சத்தியசீலன்**


**அண்ணா விருது**
**திரு. க.சுந்தரம்**


**கலைஞர் விருது**
மாண்புமிகு **ஐ. பெரியசாமி**


**பாவேந்தர் விருது**
திருமதி **மலிகா கதிரவன்**


**பேராசிரியர் விருது**
**திரு.ந.இராமசாமி**

**தி.மு.க. தலைமைக் கழகம்**